**செய்தி வெளியீடு எண்: 710** **நாள்:27.09.2020**

## <u>செய்தி வெளியீடு</u>

'தமிழர் தந்தை' சி.பா.ஆதித்தனார் அவர்களின் 116ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, எழும்பூர் இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு இன்று (27.09.2020) தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், 'தமிழர் தந்தை' சி.பா.ஆதித்தனார் அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 27ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அதன்படி, 'தமிழர் தந்தை' சி.பா. ஆதித்தனார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, எழும்பூர் இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு இன்று (27.9.2020) மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு.கே.பாண்டியராஜன் அவர்கள், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழக தலைவர் திருமதி.பா.வளர்மதி அவர்கள் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை, இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**